**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 05/2021 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Ammasi | CASTE | : | |
| S/O. / W/O. | Muthiah | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**CHIEF EXAMINATION : 16-02-2022**

நான் இவ்வழக்கில் 1ம்வாதி. எனது தரப்பு முதல் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் தெரியும். தாவா சொத்திற்கு 1.1.61 முதல் 31.12.1986 வரை எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழ் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், தாவா சொத்திற்கு 1.1.87 முதல் 04.11.2020 வரை எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், வழக்கு சொத்திற்குண்டான பட்டா எண். 643க்குண்டான கணினி பட்டா வா.சா.ஆ.3 ஆகவும், எனது தந்தை முத்தையா மூப்பனார் என்பவர் இறந்ததற்கான இறப்பு சான்று நகல் வா.சா.ஆ.4 ஆகவும், எனது தந்தை முத்தையா மூப்பனார் என்பவரது வாரிசு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) வா.சா.ஆ.5 ஆகவும், எனது தந்தை பெயரில் உள்ள மின் கட்டண அட்டை வா.சா.ஆ. 6ஆகவும், (மேற்படி வா.சா.ஆ.6 ஆவணம் இடைக்கால மனு எண். IA.No. 1171/2021ன்படி கடந்த 21.12.2021ம் தேதியில் அனுமதிக்கப்பட்டதின் பேரில் குறியீடு செய்யப்பட்டது. நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.7 ஆகவும், அதற்கான அஞ்சலக ரசீது வா.சா.ஆ. 8 ஆகவும், சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.9 ஆகவும், நான் 23.11.2020ம் தேதியில் காடுபட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.10 ஆகவும், தாவா சொத்திற்கு பட்டா 643ன்படி வழங்கப்பட்ட 10(1) கணினி சிட்டா வா.சா.ஆ.11 ஆகவும் தாக்கல் செய்துள்ளேன். (வா.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

(ஒம்.) திரு. D. ராம்கணேஷ், எம்.ஏ.,எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி